**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 25ம் நாள்
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 190/2022**
**CNR.No.TNMY07-000273-2022**

சீர்காழி தாலுக்கா மற்றும் டி.மு. இலாகா மருவத்தூர் கிராமத்தில் வசிக்கும் திருநாவுக்கரசு குமாரர் 58 வயதுள்ள விஜயகுமார். **...வாதி**

**...எதிர்...**

மயிலாடுதுறை டிமு இலாகா, குத்தாலம் தாலுக்கா, கோமல் அஞ்சல், கொத்தங்குடி கிராமம், மணவெளித்தெருவில் வசிக்கும் பிச்சை முத்து மனைவி சுமார் 50 வயதுள்ள விஜயலெட்சுமி. **...பிரதிவாதி**

தாவா தொகை ரூ.40,140/–ம், அசல் தொகை ரூ.30,000/–க்கு பின்வட்டியுடன் வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து கிடைக்கும்படி உத்தரவிடக்கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 13.09.2022 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 19.09.2022 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாட்கள் மற்றும் இடம் | 08.08.2019–ம் தேதியில் சீர்காழி தாலுக்கா, மருவத்தூர் கிராமத்தில் வழக்கு மூலம் எழுந்துள்ளது. |

**<u>பொருமானம் மற்றும் நீதிமன்ற கட்டணம்</u>**

வழக்கு பிராமிசரி நோட்டின் அசல் தொகை — ரூ. 30,000.00

மேற்படி தொகை ரூ.30,000/–க்கும் 08.08.2019
முதல் நாளது (08.10.2021) வரையில் 12 சதவீதம்
கூடிய வட்டி — ரூ. 7,800.00

| | |
|---|---|
| கூடுதல் | ரூ. 37,800.00 |
| 08.10.2021–ல் பிரதிவாதியால் வரவு | ரூ. 1,000.00 |
| | ரூ. 36,800.00 |
| அசல் தொகைக்கு 09.10.2021 முதல் நாளது (12.09.2022) வரை 12 சதவீத வட்டி | ரூ. 3,340.00 |
| **ஆகக் கூடுதல்** | **ரூ. 40,140.00** |

(அதற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ. 1,206/–ம் நீதிமன்ற கட்டண சட்டப்பிரிவு 22ன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது).

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 04.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு S.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. E. செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்பாணை

1. இவ்வழக்கானது செலவுத்தொகையுடன் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

2. தாவா தொகையான ரூ.40,140/–ஐ பிரதிவாதி, வாதிக்கு திருப்பிச் செலுத்த வேண்டுமென்றும், தாவா அசல் தொகை ரூ.30,000/–க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதிவரை ஆண்டுக்கு 12% வட்டியும்,

3. பின்னிட்டு தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தும் தேதிவரையில் ஆண்டுக்கு 6% பின்வட்டி சேர்த்து வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

**<u>வாதி தாக்கல் செய்த செலவுத்தொகை பட்டியல்</u>**

| | | |
|---|---|---|
| 1. வழக்குரை நீதிமன்ற கட்டணம் | ரூ. | 1,206 |
| 2. வக்காலத்து | ரூ. | 10 |
| 3. படி மெமோ நீதிமன்ற கட்டணம் | ரூ. | 20 |
| 4. மனுக்கள் நீதிமன்ற கட்டணம் | ரூ. | 20 |
| 5. வழக்கறிஞர் முன் அறிவிப்பு | ரூ. | 250 |
| 6. தட்டச்சு கூலி | ரூ. | 200 |
| 7. வழக்கறிஞர் கட்டணம் சீனியர் | ரூ. | 2,254 |
| | ----------- | |
| ஆக கூடுதல் | **ரூ.** | **3,960/-** |
| | ---------- | |

**பிரதிவாதி தரப்பில் செலவுத்தொகை பட்டியல் விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 09-ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/- மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>தீர்ப்பாணை</u>**

அசல் வழக்கு எண்.190/2022

நாள்.09.03.2026.